# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS 2023
(~~குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~)

C 8101984

1. District : மாவட்டம் மதுரை — PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு — Year: ஆண்டு 2024 — FIR No.: மு.த.அ. எண் 13/24 — Date: நாள் 09.11.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the PC (amendment) Act 2018 and 106 BNSS
   (ii) Act சட்டம்:
   (iii) Act சட்டம்: BNSS
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 08.11.2024 — Date to : நாள் வரை 09.11.2024
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 17.10 மணி — Time to : நேரம் வரை 01.15 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.11.2024 — Time : நேரம் 04.15 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.11.2024 — Time : நேரம் 04.50 மணி

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 08 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — சார் பதிவாளர் அலுவலகம், விளாங்குடி, மதுரை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — P. ஜெயஹர்மினா
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — P. பழனி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 52/24
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — துணை ஆய்வுக்குழு அலுவலர்
   (g) Address : முகவரி — மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. H. வீரக்குமார், சார் பதிவாளர், விளாங்குடி, (2) திரு. E. முத்துகுமாரசாமி (PI) (3) திரு. M. மாரிமுத்து (PI) (4) திரு. N. விக்னேஷ் (PI) (5) திரு. S. பாண்டிகுமார் (PI)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — இல்லை —

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு** —

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்** —

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)**

தனித் தாள்கள் பக்கம் 3 முதல் 11 வரை
இணைக்கப்பட்டுள்ளது.

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

9.11.2024

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /**
**பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

09.11.2024 at 05.05 hrs.

**Name: பெயர்** த. கிரியகலா
**Rank: நிலை** காவல் ஆய்வாளர்,
அ.த.க. பிரிவு,
மதுரை (09.11.2024)

**Honoured Sir,**

**Submitted,**

இன்று 09.11.2024-ம் தேதி அதிகாலை, காவல் ஆய்வாளர் T. சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.P. ஜெயஷர்மிளா, B. Sc., அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் 04.15 மணிக்கு ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை வடக்கு பதிவு மாவட்டம் விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை குறிப்புரை 08.11.2024 - 17.50 மணி முதல் 09.11.2024 - 01.15 மணி வரை, திடீர் இணை ஆய்வின் போது விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,97,800/-, கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள் மற்றும் விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலில் இருந்த ஐந்து அலுவலர்கள் மற்றும் மற்றும் தனிநபர்களான திருவாளர்கள். மாரிமுத்து, விக்னேஷ், பழனிக்குமார், நந்தினி மற்றும் முத்துகுமாரசாமி ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி.P. ஜெயஷர்மிளா, B. Sc., துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 005 / 2024 / I1, நாள் : 09.11.2024 அம்மா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத்துறை - மதுரை வடக்கு பதிவு மாவட்டம் விளாங்குடி சார்பதிவாளர் அலுவலக சார்பதிவாளர் திரு. வீரக்குமார் அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 08.11.2024-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,97,800/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 08.11.2024-ம் தேதியன்று, மதுரை மாவட்டம், விளாங்குடி சார்பதிவாளர் அலுவலக சார்பதிவாளர் வீரக்குமார் அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், புரோக்கர் மற்றும் தனக்கு தற்காலிக வாகன ஓட்டுநராக உள்ள முத்துகுமாரசாமி மூலமாக லஞ்சம் வாங்குவதாக இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா அவர்கள் தெரிவித்தார்கள். அதன்பேரில், அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து விட்டு, 08.11.2024 மதியம் சுமார் 15.45 மணிக்கு மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு வந்து, பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திருமதி.

சூரியகலா, திரு. குமாரகுரு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (08.11.2024) மாலை 16.00 மணிக்கு புறப்பட்டு, சுமார் 16.30 மணி முதல், விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் சர்ச் ரோட்டில் இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்குறிப்பிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வந்தவர்கள் அரசு கட்டணம் நீங்கலாக சார்-பதிவாளராக பணியாற்றும் திரு. வீரக்குமார் என்பவர் பத்திர எழுத்தர்கள் புரோக்கர் மற்றும் தனது தற்காலிக வாகன ஓட்டுநராக உள்ள முத்துகுமாரசாமி மூலமாக தங்களிடம் கூடுதல் தொகை வசூல் செய்து வைத்துள்ளதாக தகவல் தெரிவித்தார்கள். அதன்பேரில் 08.11.2024-ம் தேதி மாலை 17.10 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை விளாங்குடி சார்-பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே சென்று, அலுவலகத்திற்குள் இரண்டாவது அறையில் வடக்கு பக்கம் சுவரை ஒட்டி கிழக்கு திசை நோக்கியவாறு போடப்பட்டிருந்த சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த அலுவலரிடம் நான் உடன் வந்திருந்த அனைவரையும் கூட்டிச் சென்று, என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து, மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்த போது, அந்த நபர் சற்று பதட்டத்துடன் தனது இருக்கையை விட்டு எழுந்து நின்று, தனது பெயர் வீரக்குமார் என்றும், தான் மேற்படி விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 29.12.2022-ம் தேதி முதல் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், தற்போது அலுவலகத்தில் தன்னுடன் உதவியாளர் திரு. தினேஷ்குமார், அலுவலக உதவியாளர் திரு.முகமது அலிகான், Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி மற்றும் I.P.Camera Operator திரு. சுந்தர்ராஜன் ஆகியோர் பணிபுரிந்து வருவதாக தெரிவித்து, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். பின்னர், மேற்படி அறையில் நின்று கொண்டிருந்த தனிநபரான திரு. மாரிமுத்து என்பவரிடம் விசாரித்த போது, தான் மதுரை ஐய்யர்பங்களாவில் உள்ள முத்து இருளப்பன் என்பவரின் அலுவலகத்தில் பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவரது அண்ணன் வழக்கறிஞர் கந்தசாமி ஆவார் எனவும், முத்து இருளப்பன் பத்திர பதிவு சம்பந்தமாக பத்திரங்கள் தயார் செய்து அதில் அவரது அண்ணன் கந்தசாமியிடம் கையெழுத்து வாங்கி மேற்படி அலுவலகத்தில் வழக்கமாக பதிவு செய்வதாகவும், தற்போது மதுரை செல்லூரில் உள்ள ஒரு வீட்டிற்கான கியைரயப் பத்திரம் பதிவு செய்வதற்கு அந்த சொத்தின் வழிகாட்டி மதிப்பு குறிப்பிடுவது சம்பந்தமாக விசாரிப்பதற்காக இன்று விளாங்குடி சார்பதிவகம் வந்திருப்பதாக பதட்டத்துடன் தெரிவித்தார். அவர் கூறும் விபரங்கள் தவறாக இருந்தது, எனவே, அவரிடம் தகவல் தெரிவித்து சோதனை மேற்கொண்ட போது, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.9,640/- (ரூ.500 X 13 , ரூ.200 X 3 , ரூ.100 X 16 , ரூ.50 X 6 , ரூ.20 X 29, ரூ.10 X 6) காணப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்த போது, அதில் அவரது சம்பளப்பணம் ரூ.9,000/- என்றும் தனது

செலவுக்கான பணம் ரூ.640/- எனறும் கூறினார். அவர் கூறிய விபரம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாத காரணத்தால் அவரிடமிருந்து சந்தேகத்தின் அடிப்படையில் பணம் ரூ.9,000/- (ரூ.500 X 13, ரூ.200 X 3 , ரூ.100 X 16 , ரூ.50 X 6) கைப்பற்றப்பட்டது. அவரது சொந்தப்பணம் ரூ.640/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், அவருக்கு அருகில் நின்றிருந்த திரு. விக்னேஷ் என்பவரிடம் விசாரித்த போது, அவர் தான் வழக்கறிஞர் கிஷோர் என்பவருக்கு உதவியாளராக உள்ளேன் என்றும், தான் அவர் எழுதி கொடுக்கும் பத்திரங்களை பதிவு செய்வதற்காக மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருவதாகவும், இன்று வழக்கறிஞர் கிஷோர் அவர்கள் தயாரித்து கொடுத்த கிருபாகரன் வெங்கடேசன் என்பவரது செட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்வதற்காக மேற்படி விளாங்குடி சார்பதிவகத்திற்கு மதியம் சுமார் 12.30 மணிக்கு வந்து, மேற்படி பத்திரத்தை பதிவு செய்த பின்பு, அந்த பத்திரத்தை பெறுவதற்காக தான் மட்டும் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், பதிந்த பத்திரத்தை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட பத்திரம் பதிவு செய்யப்பட்ட நபர்தான் வந்து அதனை பெற கையெழுத்திட வேண்டும். இந்நிலையில், மேற்படி பத்திரத்தை தான் வாங்க வந்திருப்பதாக விக்னேஷ் கூறுவது தவறாகும். எனவே அவரிடம் தகவல் தெரிவித்து சோதனை மேற்கொண்ட போது, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.20,000/- (ரூ.500 X 40 ) காணப்பட்டது. மேலும், அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.10,000/- (ரூ.500 X 20 ) காணப்பட்டது. ஆக மொத்தத்தில் அவரிடம் ரூ.30,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்த போது, அந்தப்பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த அறையில் நின்றிருந்த திரு. பழனிக்குமார் என்பவரிடம் விசாரித்த போது, தான் பத்திரம் பதிவு செய்ய வருபவர்களுக்கு மேற்படி அலுவலகத்தில் புரோக்கராக செயல்பட்டு வருவதாகவும், தனக்கு மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலக உதவியாளர் திரு. முகமது அலிகான் மற்றும் சார்பதிவாளர் திரு. வீரக்குமார், மேலும் திரு. வீரக்குமாரின் கார் டிரைவர் முத்துகுமாரசாமி ஆகியோர் நன்கு பழக்கம் என்றும், தனக்கு சம்பளமாக தினமும் ரூ.300/- கிடைக்கும் என்று படபடப்புடன் தெரிவித்தார். அவரிடம் தகவல் தெரிவித்து சோதனை மேற்கொண்ட போது, அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.9,000/- (ரூ.500 X 18) காணப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்த போது, இன்று பத்திர பதிவு செய்ய வந்த ஆவணதாரர்களிடமிருந்து தான் பெற்ற பணம் என்று கூறினார். மேலும், அவரது சட்டைப்பையில் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் உள்ள இரண்டு தாள்கள் காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்ட போது, ஒரு தாளில் ஆவண எழுத்தர்களின் பெயர்களும், பெயருக்கு எதிரே அவர்கள் கொடுத்த தொகையையும் குறிப்பு எழுதி உள்ளதாகவும், மற்றொரு தாளில் ஆவண எண். 5311 முதல் 5341 வரை ஆவண எண்கள் மற்றும் ஆவண எழுத்தர்கள் பெயர் மற்றும்

தரவேண்டிய தொகைக்கான குறிப்புகளையும் எழுதி உள்ளதாக தெரிவித்தார். ஆகையால் அவரிடமிருந்த பணம் ரூ.9,000/- மற்றும் அவர் குறிப்பு எழுதி வைத்திருந்த 2 தாள்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டது. விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் Data Entry Operator இருக்கையில் திருமதி. மகாலெட்சுமி என்பவர் பணி செய்து வருகின்றார் என்றும், கணிப்பொறி அறையிலும் உள்ள கணிப்பொறிகளை இயக்கும் பணி செய்வார் என்றும் அங்கிருந்த அலுவலர்கள் தெரிவித்தார்கள். மேற்படி Data Entry Operator இருக்கைக்கு முன்புள்ள கணிப்பொறி மேஜை ஆகியவற்றை சோதனை மேற்கொள்ள, கணிப்பொறி கீ போர்டுக்கு கீழே பணம் ரூ.600/- (ரூ.200 X 3) காணப்பட்டது. இது சம்பந்தமாக மேற்படி அலுவலக சார்பதிவாளர் மற்றும் அலுவலர்களை விசாரிக்க தங்களுக்கு அப்பணத்தை பற்றி ஒன்றும் தெரியாது என தெரிவித்தார்கள். எனவே சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி அவர்களின் இருக்கைக்கு வடக்கு பக்கம் கிழக்கு திசை நோக்கியவாறு இருக்கையில் உதவியாளர் திரு. தினேஷ்குமார் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தார். மேற்படி தினேஷ்குமார் என்பவரது இருக்கையையும், அவரது இருக்கைக்கு முன்புள்ள மேஜையையும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், அவரிடம் சோதனை மேற்கொண்ட போது, அவர் தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்த ரூ.190/-யை எடுத்து ஆஜர் செய்தார். அது சம்பந்தமாக விசாரித்த போது, தான் தனது செலவிற்காக இன்று ரூ.300/- கொண்டு வந்திருந்ததாகவும், அதனை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், தனது செலவு போக ரூ.190/-யை தற்போது வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அதனை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக இருந்தது. எனவே அவரது சொந்தப்பணம் ரூ.190/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி உதவியாளர் திரு. தினேஷ்குமார் இருக்கைக்கு எதிரே அறையின் கிழக்கு பக்க சுவரையொட்டி தெற்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அலுவலக உதவியாளர் திரு. முகமதுஅலிகான் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தார். அவரது இருக்கையையும், அவருக்கு முன்பிருந்த பிளைவுட் டேபிளையும் சோதனையிடப்பட்டது. மேலும், அவரிடம் சோதனை மேற்கொண்ட போது, அவர் தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்த ரூ.600/-யை எடுத்து ஆஜர் செய்தார். அது சம்பந்தமாக விசாரித்த போது, தான் தனது செலவிற்காக இன்று ரூ.600/- கொண்டு வந்திருந்ததாகவும், அதனை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். அதனை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக இருந்தது. எனவே அவரது சொந்தப்பணம் ரூ.600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அவ்வலுவலக கணிப்பொறி அறையை சார்பதிவாளர் திரு. வீரக்குமார் அவர்கள் முன்பாக சோதனையிடபட்டது. கணிப்பொறி அறையில் பணியில் இருந்த I.P. Camaera Operator திரு. சுந்தர்ராஜ் அவர்களின் இருக்கையும், அவருக்கு முன்புள்ள மேஜையும் சோதனையிடப்பட்டது. மேலும், அவரிடம் சோதனை மேற்கொண்ட போது, அவர் தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்த ரூ.200/-யை எடுத்து ஆஜர் செய்தார். அது சம்பந்தமாக விசாரித்த போது, தான் தனது செலவிற்காக இன்று ரூ.200/- கொண்டு வந்திருந்ததாகவும்,

அதனை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். அதனை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக இருந்தது. எனவே அவரது சொந்தப்பணம் ரூ.200/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலக கணிணி அறையில் தெற்கு ஓரத்தில் அமைந்திருந்த சிமிண்ட் திண்டில் கணிப்பொறி மற்றும் ஸ்கேனர் மிஷின் இருந்தது. அவற்றிற்கு முன்பாக கிழக்கு திசை நோக்கி போடப்பட்டிருந்த இருக்கையில் Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி அவர்கள் பணி செய்து கொண்டிருந்தார். அவர் அமர்ந்திருந்த இருக்கை மற்றும் அவருக்கு முன்பிருந்த சிமிண்ட் திண்டு சோதனையிடப்பட்டது. அவர் வைத்திருந்த கைப்பையிலிருந்து ரூ.100/- யை எடுத்து ஆஜர் செய்தார். அது சம்பந்தமாக அவரிடம் விசாரித்த போது, தான் தனது செலவிற்காக ரூ.100/-யை கொண்டு வந்ததாகவும், அதைப்பற்றி தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். அதனை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக இருந்தது. எனவே அப்பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த அறையில் தெற்கு பக்க சுவரையொட்டி உள்ள சிமிண்ட் திண்டில் I.P. Camera System வைக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த அறையின் மேற்கு பக்க சுவரை ஒட்டி அதற்குரிய மூன்று இணைய இணைப்பு பெட்டிகளும் அதனையடுத்து சுமார் 5 அடி உயரமுள்ள ஸ்டீல் பீரோ இருந்தது. அந்த இரும்பு பீரோவை சோதனையிட்ட போது, அதில் ஆய்வறிக்கைகள் மற்றும் பழைய ஆவணங்கள் காணப்பட்டது. அந்த இரும்பு பீரோவிற்கு தெற்கு பக்கத்தில் தரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஐந்து பண்டல்களுக்கு (டாக்குமெண்ட் கவர்கள்) இடையில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க அதில் ரூ.18,000/- (ரூ.500 X 36) இருந்தது. அந்த பணம் சம்பந்தமாக மேற்படி அறையில் இருந்த திருமதி. மகாலெட்சுமியிடம் விசாரித்த போது, தனக்கு அந்த பணத்தை பற்றி எதுவும் தெரியாது என தெரிவித்து விட்டார். மேலும், அந்த பணம் சம்பந்தமாக திரு. சுந்தர்ராஜனிடம் விசாரித்த போது, அவரும் தனக்கு அந்த பணத்தை பற்றி எதுவும் தெரியாது என கூறி, அந்த அறைக்கு புரோக்கர் பழனிக்குமார் மற்றும் திரு. வீரக்குமாரின் கார் ஓட்டுநர் திரு. முத்துகுமாரசாமி ஆகியோர் வந்துவிட்டு சென்றதாக தெரிவித்தார். இது சம்பந்தமாக மேற்படி கணிணி அறையின் முன்பு இருக்கையில் உள்ள அலுவலக உதவியாளர் முகமதுஅலிகான் என்பவரிடம் விசாரித்த போது, அப்பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால், மேற்படி அறைக்கு புரோக்கர் பழனிக்குமார் மற்றும் திரு. வீரக்குமாரின் கார் ஓட்டுநர் திரு. முத்துகுமாரசாமி ஆகியோர் வந்துவிட்டு சென்றதாக தெரிவித்தார். எனவே சந்தேகத்தின் பேரில், மேற்படி அறையில் தரையில் கிடந்த பணம் ரூ.18,000/- கைப்பற்றப்பட்டது. இதற்கிடையில், விசாரித்து தெரிந்து கொண்ட திருமதி. M. நந்தினி, க/பெ. மகேஷ் என்பவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சார்பதிவாளர் வீரக்குமார் அவர்களை சந்திக்க வந்தார். அவரிடம் அதற்கான காரணத்தை விசாரித்த போது, தான் அருகில் உள்ள KVR பத்திர எழுத்தர் அலுவலகத்தில் கணிணி தட்டச்சு செய்யும் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அதன் உரிமையாளர் வழக்கறிஞர் ராஜதுரை என்றும், தங்கள் அலுவலகம் மூலமாக பதிவு செய்த

பத்திரத்திற்கு களப்பணி செய்வதற்காக என்றைய தேதியில் சார்பதிவாளர் வீரக்குமார் அவர்கள் வருவார் என்பதை தெரிந்து கொள்வதற்காக அவரது கார் ஓட்டுநர் முத்துகுமாரசாமி என்ற குமாரை மேற்படி அலுவலகத்திற்கு எதிரே உள்ள அறைக்கு சென்று அவரை பார்த்து கேட்ட பொழுது, அவர் மேற்படி வீரக்குமாரிடம் கேட்டுக்கொள்ளும்படி கூறியதால், வீரக்குமாரிடம் கேட்டுக்கொள்வதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் கூறினார். அவரிடம் சோதனை மேற்கொள்வது பற்றி தெரிவித்து, அவரது கையில் இருந்த பணம் ரூ.16,000/- குறித்து அவரிடம் கேட்ட போது, தன்னுடைய நவம்பர் மாத சம்பள பணம் ரூ.15,000/- என்றும், தனக்கு தினப்படியாக ரூ.200/- வீதம் ஆவண எழுத்தர் கொடுத்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விபரம் ஏற்றுக்கொள்ளும் படியாக இல்லாத காரணத்தால் அந்தப்பணம் ரூ.16,000/- (ரூ. 500 X 32) கைப்பற்றப்பட்டது. மேலும், அவர் கைப்பையில் இருந்த ரூ.1,800/-யை ஆஜர் செய்து, அப்பணம் தனது சொந்தப்பணம் என தெரிவித்தார். எனவே, ரூ.1,800/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக அனைவரிடமும், அவர்களது எழுத்து மூலமான வாக்குமூலம் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பெறப்பட்டது. அந்த சமயத்தில், மேற்படி பழனிக்குமாரிடம் மேற்படி அலுவலக கணிப்பொறி அறைக்கு சென்று வந்த விபரம் மற்றும் அங்கு கணிணி அறையில் காணப்பட்ட ரூ.18,000/- பற்றி கேட்ட போது, தான் மேற்படி அலுவலகத்திற்கு உள்ளே பலமுறை சென்று வந்ததாகவும், தனக்கு கணிப்பொறி அறையில் காணப்பட்ட பணம் ரூ.18,000/- பற்றி எதுவும் தெரியாது என தெரிவித்தார். பின்பு சார்பதிவாளர் இருக்கை மற்றும் அவருக்கு முன்பிருந்த மேஜை ஆகியவற்றை திரு. வீரக்குமார் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. மேலும், அவரிடம் சோதனை மேற்கொண்ட போது, அவர் தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்த ரூ.1,000/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். அது சம்பந்தமாக விசாரித்த போது, தான் தனது செலவிற்காக இன்று ரூ.1,000/- கொண்டு வந்திருந்ததாகவும், அதனை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். அதனை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக இருந்தது. எனவே அவரது சொந்தப்பணம் ரூ.1,000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திரு. வீரக்குமாரிடம் அவரது பொறுப்பில் உள்ள மேற்படி அலுவலகத்தில் கணிப்பொறி அறையில் தரையில் காணப்பட்ட ரூ.18,000/- மற்றும் Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி என்பவர் இருக்கைக்கு முன்புள்ள கணிப்பொறி கீ போர்டுக்கு கீழே காணப்பட்ட பணம் ரூ.600/- ஆகியவற்றை பற்றி கேட்ட போது, தனக்கு எதுவும் தெரியாது எனத்தெரிவித்தார். அவரிடம் அவ்வலுவலகத்திற்கு பலமுறை வந்து சென்ற புரோக்கர் பழனிக்குமார் மற்றும் அவரது தற்காலிக வாகன ஓட்டுநர் திரு. முத்துகுமாரசாமி ஆகியோரை பற்றி விசாரித்த போது, அவர், அவர்களை தனக்கு நீண்ட நாட்களாக தெரியும் என்றும், அவர்கள் பத்திரம் பதிவு செய்ய வரும் நபர்களிடம் பணம் பெறும் விஷயம் தெரியும் என்றும், இன்று அவர்கள் தனது அலுவலகத்திற்கு வந்து தன்னை சந்தித்ததாகவும், அதில் பழனிக்குமார் தற்போது தனது அலுவலகத்திலே இருக்கிறார் என்றும், தனது கார் ஓட்டுநர் முத்துகுமாரசாமி, தனது அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஜெராக்ஸ் கடைக்கு பின்புறம் ஒரு அறையில் ஓய்வு எடுத்து

வருவார் என்றும், இன்று தனது அலுவலகத்தில் மொத்தம் 31 பத்திரங்கள் மற்றும் திருமணப்பதிவு பத்திரம் ஒன்றும் பதிவு செய்யப்பட்டது என்றும், அதற்காக வந்த நபர்களிடம், பழனிக்குமார் மற்றும் முத்துகுமாரசாமி பணம் பெற்றிருப்பார்கள் என்றும், அவ்வாறு பெற்ற பணம் சுமார் 1 ¼ லட்சம் இருக்கும் என்றும், முத்துகுமாரசாமி தான் பெற்ற பணத்தை தனது அறையில் வைத்திருப்பார் என்றும் தெரிவித்தார். மேலும், அரசு விதிப்படி, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்பவர்கள் மட்டும்தான் வந்து செல்ல வேண்டும். கொடிநாள் கட்டணம் உட்பட பணம் அனைத்தையும் ஆன்-லைன் மூலமாகத்தான் கட்ட வேண்டும். பணம் கையில் வாங்கவோ, கொடுக்கவோ எங்கள் அலுவலகத்திற்குள் அனுமதி இல்லை. மேலும், ஆவண எழுத்தர்களோ, இடைத்தரகர்களோ அலுவலகத்திற்குள் அனுமதிக்க கூடாது என்றும் தெரிவித்தார். இது சம்பந்தமாக அவரிடம் எழுத்து மூலமான வாக்குமூலத்தை பெற்றேன். அதனைத்தொடர்ந்து திரு. வீரக்குமார் அவர்கள் தெரிவித்த தகவலின் படி மேற்படி அலுவலகத்திற்கு எதிரே இருந்த லோட்டஸ் ஜெராக்ஸ் பின்புறத்தில் கிழக்கு திசை நோக்கிய வாசலுடன் இருந்த அறைக்கு, நான் சோதனை குழுவினரை அழைத்து சென்ற போது, அந்த அறையில் மேற்கு பக்க சுவரையொட்டி போடப்பட்டிருந்த இருக்கையில் கிழக்கு பார்த்து டேபிளின் முன்பாக அமர்ந்திருந்த நபரிடம், அனைவரையும் அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் முத்துகுமாரசாமி என்றும், தான் விளாங்குடி சார்பதிவாளர் திரு. வீரக்குமார் அவர்களுக்கு கார் ஓட்டுநராக பல வருடங்களாக வேலை செய்து வருவதாகவும், தனக்கு புரோக்கர் பழனிக்குமாரை நன்கு தெரியும் என்றும், தானும், பழனிக்குமாரும் மேற்படி சார்பதிவாளர் அலவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்ய வரும் நபர்களிடம் சார்பதிவாளர் திரு. வீரக்குமார் அவர்களுக்காக பணம் பெறுவோம் என்றும், தான் அப்பணத்தைத்தான் தற்போது தங்கியிருக்கும் அறையில் வைத்திருப்பேன் என்றும், தான் அந்த அறையை செல்வம் என்பவரிடமிருந்து ரூ.2,500/- மாத வாடகைக்கு எடுத்து வேலை நாட்களில் தங்கியிருந்ததாகவும், அந்த அறையில் திரு. வீரக்குமார் அவர்களுக்கு ஆவண எழுத்தர்கள் தரும் பணத்தை தான் வாங்கி தனது அறையில் வைத்திருந்து, பிறகு திரு.வீரக்குமார் அவர்கள் வீட்டிற்கு செல்லும் போது, அவரிடம் கொடுத்துவிடுவேன் என்றும் தெரிவித்தார். பின்னர், அவரது அறை சோதனையிடப்பட்டது. சோதனையின் போது, அந்த அறையின் மேஜை டிராயரிலிருந்து திரு. முத்துகுமாரசாமி ஆஜர் செய்த பணம் ரூ.1,15,200/- (ரூ.500 X 184, ரூ.200 X 71, ரூ.100 X 35, ரூ.50 X 110 ) குறித்து விசாரித்த போது, அந்தப்பணம் அவரது பங்கு வர்த்தக பணம் என தெரிவித்தார். அவர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அந்தப்பணம் ரூ.1,15,200/- கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி மேஜையில் காணப்பட்ட கார் சாவியை பற்றி விசாரித்த போது, அது மேற்படி சார்பதிவாளர் வீரக்குமார் அவர்களின் i20 வாகனத்தின் சாவி என்றும், அந்த கார் இதே தெருவில் சர்ச்க்கு செல்லும் வழியில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அந்த வாகனம் TN 63 BZ 1444 White Color i20 Hundai ஆனது முத்துகுமாரசாமி உதவியுடன் முழுமையாக சோதனையிடப்பட்டது. இது சம்பந்தமாக

திரு.முத்துகுமாரசாமி அவர்களிடம் எழுத்து மூலமான வாக்குமூலம் பெறப்பட்டது. தொடர்ந்து, விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே வந்து, மேல் விசாரணைக்காக திரு. வீரக்குமார் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் ஆஜர் செய்த (1) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 11 வரை எழுதப்பட்டுள்ளது, (2) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக TCS பணியாளர் வருகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 23 வரை எழுதப்பட்டுள்ளது, (3) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக தணிக்கை வருகை பதிவேடு - பக்கம் 1 முதல் 18 வரை எழுதப்பட்டுள்ளது, (4) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக தாமத வருகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 10 வரை எழுதப்பட்டுள்ளது, (5) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு - பக்கம் 1 முதல் 4 வரை எழுதப்பட்டுள்ளது, (6) விளாங்குடி சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்பு பதிவேடு - பக்கம் 1 முதல் 49 வரை எழுதப்பட்டுள்ளது (7) Computer Printout of Vilangudi Sub-Registrar Office, Year 2024 Month November Account A Vilangudi - பக்கம் 1 முதல் 4 வரை ஆகிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும், திடீர் இணை ஆய்வின் போது, அலுவலகத்தில் Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி என்பவர் இருக்கை முன்புள்ள கணிப்பொறி கீ போர்டுக்கு கீழே காணப்பட்ட பணம் ரூ.600/- (ரூ.200 X 3), அலுவலக கணிணி அறையில் தரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஐந்து பண்டல்களுக்கு (டாக்குமெண்ட் கவர்கள்) இடையில் இருந்து எடுத்த பணம் ரூ.18,000/- (ரூ.500 X 36), அலுவலகத்திற்கு வந்திருந்த தனிநபர்களான திரு.மாரிமுத்து என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.9,000/- (ரூ.500 X 13, ரூ.200 X 3 , ரூ.100 X 16 , ரூ.50 X 6), திரு. விக்னேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.30,000/- (ரூ.500 X 60 ), திருமதி. நந்தினி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.16,000/- (ரூ.500 X 32 ), அலுவலகத்தில் புரோக்கராக செயல்படும் திரு. பழனிக்குமார் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.9,000/- (ரூ.500 X 18) மற்றும் அவர் குறிப்பு எழுதி வைத்திருந்த இரண்டு தாள்கள், சார்பதிவாளர் வீரக்குமார் அவர்களின் தற்காலிக வாகன ஓட்டுநர் திரு. முத்துகுமாரசாமி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,15,200/- (ரூ.500 X 184, ரூ.200 X 71, ரூ.100 X 35, ரூ.50 X 110 ) என மொத்தம் ரூ.1,97,800/- ஆகியவற்றிற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினாலும், சந்தேகத்தின் பேரில் இப்பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்தம் 8 ஆவணங்கள், சார்பதிவாளர் திரு. வீரக்குமார், உதவியாளர் திரு. தினேஷ்குமார், அலுவலக உதவியாளர் திரு. முகமது அலிகான், Data Entry Operator திருமதி. மகாலெட்சுமி, IP Camera Operator திரு. சுந்தர்ராஜன், தனிநபர்கள் திரு. மாரிமுத்து, திரு. விக்னேஷ், திரு. பழனிக்குமார், திருமதி. நந்தினி மற்றும் சார்பதிவாளர் வீரக்குமாரின் தற்காலிக வாகன ஓட்டுநர் திரு. முத்துகுமாரசாமி ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் விளாங்குடி சார்பதிவகத்தில் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.1,97,800/- ஆகியவற்றை

இணைத்து (1) திரு. வீரக்குமார், சார்பதிவாளர் நிலை - 1, விளாங்குடி சார்பதிவகம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், மதுரை, (2) திரு. முத்துகுமாரசாமி, (3) திரு. பழனிக்குமார், (4) திரு. மாரிமுத்து மற்றும் (5) திரு. விக்னேஷ் ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம்/- XXXXX 9.11.2024 (P. ஜெயஷர்மிளா) துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர்,மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம்,மதுரை மாவட்டம். இணைப்பு : 1) விளாங்குடி சார்பவதிகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 08.11.2024 - 17.50 மணி முதல் 09.11.2024 - 01.15 மணி வரை 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,97,800/- 3) விளாஙகுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள் 4) விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஐந்து அலுவலர்கள் மற்றும் தனிநபர்களான திருவாளர்கள். மாரிமுத்து, விக்னேஷ், பழனிக்குமார், நந்தினி மற்றும் முத்துகுமாரசாமி ஆகியோரது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (09.11.2024) at 04.15 hrs along with Joint Surprise Check Proceedings dated 09.11.2024, Cash Rs. 1,97,800/-, 10 Statements and seized 8 documents. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.13/2024 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS 2023 on 09.11.2024 at 04.30 hrs. Sd/- XXXXX 9.11.2024 (T. Suriyakala), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report of Tmt. P. Jeyasharmila, Joint Surprise Check Proceedings Dated : 09.11.2024 and 10 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

(T. Suriyakala)
Inspector of Police,
V&AC, Madurai
9.11.2024